ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 4 | மே 1999 | கானம் : 10

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 4 மே 1999 கானம் : 10

## விஷய ஸூசிகை

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர்-42 | 4 |
| 3. | பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் நாமமாலிகா ஸ்தோத்ரம் | 12 |
| 4. | நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 23 | 13 |
| 5. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 14 |
| 6. | வேத கதைகள்-24 | 16 |
| 7. | எந்தரோ மஹானுபாவுலு - 12 | 18 |
| 8. | லீலா விநோதன் - 2 | 23 |
| 9. | பாலகர்களுக்கு ஒரு கதை - 18 | 28 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 45 | 30 |
| 11. | செய்திகள் | 32 |



புஷ்கரில், ஶ்ரீவைகுண்டநாத பெருமாள் ரதத்தை வடம் பிடிக்கும்
ஶ்ரீ ஸ்வாமிகளும் பக்தர்களும்.

Photo by : Sri Sunder, Hyderabad.

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : கேதாரகௌளை தாளம் : ஆதி

பல்லவி

*ஸ்ரீநாத: மமநாத:*
*மமநாத: ஜகந்நாத: (ஸ்ரீநாத:)*

சரணம்

*தேவாதி தேவ: ராஜாதி ராஜ:*
*ஸுஜனவினுத: வல்லப ஸுலப: (ஸ்ரீநாத:)*

*பாவரஸபரித பக்த பூஜக:*
*பவப்ரஹ்மாதி ஸுரகண ஸேவித: (ஸ்ரீநாத:)*

*பரமஸுகப்ரத லீலா விநோத:*
*பரமஹம்ஸமுகமுக கீர்த்தித நாத: (ஸ்ரீநாத:)*

*புஷ்டிமார்கஜன வந்தித மூர்த்தி:*
*தவேஷ்ட முரளீதர லாலித மூர்த்தி: (ஸ்ரீநாத:)*

---

வளரும் குழந்தை, தாயின் அரவணைப்புக்காக ஏங்குகின்றது. பருவம் அடைந்த பிறகு ஆண், பெண் துணைக்காக மனம் ஏங்குகின்றது. வயோதிகத்தில் மனது ஆறுதலையும், ஸமாதானத்தையும் தரக்கூடியவர்களை நினைத்து ஏங்குகின்றது. உலகத்தில் ஸாரம் இல்லை என்று தெரிந்து கொண்ட மனது இதற்கும் மேற்பட்ட ஸுகத்தை தரக்கூடிய குருவை நாடுகின்றது.

- **பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்**

# 42

சென்னையிலிருந்து கிளம்பிய நம் ஸ்வாமிகள், பெங்களூர் வழியாக பிப்ரவரி 26-ந் தேதி பண்டரிபுரம் சென்றடைந்தார்கள். பண்டரீபுரம் சென்றடைந்தபொழுது இரவு 10 மணி இருக்கும். சந்திரபாகா நதியில் ஸ்நானம் செய்த பிறகு, அனுஷ்டானங்களை எல்லாம் முடித்துக்கொண்டு, பண்டரீநாதனை சென்று தரிசனம் செய்தார்கள். மறுநாள், ஏகாதசீ. ஆதலால், பண்டரீபுரத்தில் நல்ல கூட்டம். பண்டரீ முழுவதும் ஸாதுக்கள் கூட்டம். ஒரே நாமஸங்கீர்த்தன கோஷம். பல இடங்களில், பாகவத ஸப்தாஹம் நடந்து வந்தது. மறுநாள் காலை சந்திரபாகையில் ஸ்நானம் செய்து, விட்டல மந்திரத்தை சுற்றி உள்ள வீதிகளில், 'ஜய ஜய விட்டல், ஜய ஹரி விட்டல்' என்று கீர்த்தனம் செய்து கொண்டே, ஸ்வாமிகள் மூன்று முறை ப்ரதக்ஷிணமாக வந்தார்.

அன்று மாலை ஸ்ரீ ஸ்வாமிகள், பண்டரீபுரத்திலிருந்து கிளம்பி பூனா, பம்பாய் வழியாக அஹமதாபாத் சென்றடைந்தார்கள். 28-02-99 அன்று அஹமதாபாத்தில் காந்திஜி ஸ்தாபித்த ஸபர்மதி ஆஶ்ரமம் மற்றும் ஸ்வாமி நாராயண் அவர்களுடைய ஸம்ப்ரதாயத்தை சேர்ந்த அக்ஷர்தாம் முதலியவற்றை பக்தர்களுடன் சென்று பார்த்தார்கள். ஸபர்மதி ஆஶ்ரமத்தில் மஹாத்மா காந்தி பயன்படுத்திய பல பொருட்களும், வரலாற்று முக்கியம் வாய்ந்த பல நிகழ்ச்சிகளின் புகைப்படங்களும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. "இந்த ஸபர்மதி ஆஶ்ரமத்தில், காந்திஜி சில காலம் தவவாழ்க்கை மேற்கொண்டதால்தான், உலகில் பல அரிய பெரிய செயல்களை ஸாதிக்க முடிந்தது" என்று நம் ஸ்வாமிகள் கூறினார்கள்.

அக்ஷர்தாமில், ஸ்வாமி நாராயண் அவர்களுடைய திருவுருவம் சுமார் 400 கிலோ தங்கத்தால் உருவப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. பிற்காலத்தில் அவர்களுடைய ஸம்ப்ரதாயத்தை சேர்ந்த சீடர்களின் திருவுருவங்களும், தங்கத்தால் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. ஸ்வாமி நாராயண் உபயோகப்படுத்திய பல பொருட்களும் அவர்களுடைய வாழ்க்கையில் நடந்த சில முக்கியமான நிகழ்ச்சிகளின்

ஸம்பவங்களும், அவர்களின் உபதேசங்களும் மிகவும் நேர்த்தியாக, பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. அவருடைய வாழ்க்கை வரலாற்றை ஒலி, ஒளி காட்சியிலும் சித்தரிக்கின்றார்கள். அவர் எழுதிய முக்கியமான நூலிற்கு "வசனாம்ருதம்" என்று பெயர். இவருடைய ஸம்ப்ரதாயம் குஜராத் மாநிலத்தில் பரவலாக காணப்படுகிறது. இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் பம்பாய், லண்டன் மற்றும் பல ப்ரஸித்தியான ஊர்களிலும், வெளிநாடுகளிலும் இவருக்காக கோவில் ஏற்படுத்தி உள்ளனர். அரிய பெரிய காரியங்களை ஸாதித்த நம்முடைய ஆதிஶங்கரர், ராமானுஜர் போன்றவர்களுக்கு, இப்படி ஓர் கைங்கர்யத்தை யாரும் செய்யவில்லையே என்று நம் ஸ்வாமிகள் தாபப்பட்டார்கள்.

அன்று இரவு அஹமதாபாத்திலிருந்து கிளம்பி மார்ச் மாதம் 1-ம் தேதி காலை சுமார் 10 மணி அளவில் ஸோம்நாத் சென்றடைந்தோம். 12 ஜோதிர்லிங்கங்களில் ஸோம்நாத்தும் ஒன்று. கடற்கரையோரத்தில் இந்த கோவில் அமைந்துள்ளது. நாங்கள் சென்ற நாளும் ஸோமவாரம் (திங்கட்கிழமை), அன்று பௌர்ணமியும் கூட. பழைய ஸோமநாதருடைய கோவில் இதை காட்டிலும் பல மடங்கு பெரியதாக இருந்ததாக தெரிகிறது. கஜினிமுகமது, கோரிமுகமது போன்றவர்களால் இந்த கோவிலில் பொதிந்திருந்த விலை உயர்ந்த ரத்தினங்கள், பல முறை சூறையாடப்பட்டன. விலை உயர்ந்த பொருட்களை சூறையாடியது மட்டுமில்லாமல் கோவிலையும் சின்னாபின்னமாக ஆக்கிவிட்டார்கள். பிற்காலத்தில், இந்தியாவின் 'இரும்பு மனிதர்' என்று எல்லோராலும் போற்றப்பட்ட ஸர்தார் வல்லபாய் படேல் நிர்மாணித்த கோவிலே நாங்கள் தரிசனம் செய்தது.

ஸோமநாதேஸ்வரரை தரிசனம் செய்துவிட்டு மாலையில் அங்கிருந்து 6 km தொலைவில் உள்ள ப்ரபாஸ தீர்த்தம் என்ற இடத்தை சென்றடைந்தோம். இந்த இடத்தில் இருந்துதான், 125 வருடகாலம் இந்த மண்ணுலகில் இருந்த பகவான் தன்னுடைய ஸரீரத்தை மறைத்துக்கொண்டு வைகுண்டம் சென்றடைந்தார். பகவான் க்ருஷ்ணன் ஒரு மரக்கிளையில் சற்றே சாய்ந்தாற்போல் படுத்திருக்க, ஒரு வேடன் தவறாக அவருடைய பாதத்தில் அம்பு எய்தி விட்டான். பகவான் மேல் அம்பு எய்து விட்டோம் என்று தெரிந்ததும் அவன் வருந்தி அழ, அவனை ஸமாதானப்படுத்தி, அவனுக்கும் ஸத்கதி கிடைக்கும் என்று அனுக்ரஹம் செய்தார். மேலும் அந்த தருணத்திலும், தன்னை சார்ந்தவர்களுக்கு அவரவர்கள் செய்யவேண்டிய காரியங்களை எல்லாம் கூறி அருளினார்.

தேவர்களும் மற்றும் எல்லோரும் பகவான் எப்படி இந்த ஸரீரத்தை விடப்போகிறார் என்று ஆவலுடன் எதிர்பார்த்து இருக்க, பளீரென்று ஒரு மின்னல் போல, ஒரு ஒளி ஏற்பட்டது. அதனுடன், பகவான் அந்தர்தானம் ஆகிவிட்டார். இந்த ஸம்பவங்கள் எல்லாம் வர்ண பிம்பங்களாக இங்கு சித்தரிக்கப்பட்டுள்ளது. ப்ரபாஸதீர்த்தமும், அந்த மரமும் அப்படியே உள்ளன. எங்களுடன் வந்திருந்த மல்லிகார்ஜுன ஸோமயாஜி, பாகவதத்தில் பகவான் அந்தர்தானம் ஆன கட்டத்தை பாராயணம் செய்து உபன்யாஸமும் செய்தார். ஸ்வாமிகள் பக்தர்களுடன் விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணமும், சிறிது நேரம் கீர்த்தனமும் செய்தார்கள்.

அங்கிருந்து கிளம்பி வெளியே வந்தவுடன் சிறிது தூரத்தில் ஒரு பஜனை மடத்தில் அநேக ஸாதுக்கள் சேர்ந்துகொண்டு, "ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெயராம்" என்று கீர்த்தனங்கள் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுடன் நாங்களும் சேர்ந்துகொண்டு சிறிது நேரம் கீர்த்தனம் செய்தோம். பிறகு ஜாகைக்கு வந்து சேர்ந்தோம். ஸ்வாமிகள் சிறிது நேரம் ஸமுத்ரகரையில் சென்று அமர்ந்திருந்தார்கள். ஸமுத்ரம், மதில் சுவர் மீது மோதுவதும், சலவை கற்களால் ஆன உயர்ந்த கோபுரமும், பூர்ண சந்த்ரனின் கிரணங்களும், தென்றல் காற்றும், மிக ரம்யமாகவும், ரஸிக்க தகுந்ததாகவும் இருந்தன.

மறுநாள் காலை கபிலம், ஸரஸ்வதி, ப்ரபாஸம் மூன்றும் சேர்ந்த ஸங்கமத்தில் ஸங்கல்பம் செய்துகொண்டு ஸ்நானம் செய்தோம். ஆஹாரத்தை முடித்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பி ஸுதாமாபுரிக்கு மாலை 5 மணி அளவில் சென்றடைந்தோம். குசேலர் வாழ்ந்த பூமி இது. இந்த ஊரின் நவீன பெயர் போர்பந்தர். நம்முடைய தேசபிதா மஹாத்மா காந்தி பிறந்த ஊரும் இதே. மஹாத்மா காந்தியின் ஜன்மஸ்தானத்தை அனைவரும் சென்று பார்த்தோம். மிகவும் பெரிய வீடாக உள்ளது. மிகவும் துப்புரவாக வைக்கப்பட்டு உள்ளது. நம்முடைய அரசாங்கத்தின் நினைவு சின்னமாக மாற்றப்பட்டு உள்ளது. குசேலர் வாழ்ந்த இடத்தில் அவருக்காக சிறிய கோவில் கட்டப்பட்டுள்ளது. அதையும் சென்று தரிசனம் செய்தோம். நாங்கள் தங்கியிருந்த சத்திரம் மிகவும் பழமையாக இருந்தாலும் மிகுந்த கலை உணர்வு அமைந்ததாக அழகாக இருந்தது.

மறுநாள் காலை ஆஹாரத்தை எடுத்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பி ஹரிஸித்தி மாதா கோவிலை சென்றடைந்தோம். இது சற்று உயர்வான இடத்தில் உள்ளது. யாதவவம்சத்தினர், ஹரிஸித்தி மாதாவை குலதெய்வமாக வழிபட்டதாக சொல்லப்படுகிறது. நாங்கள் சென்ற தினம்

ஹோலி முடிந்து, பலர் புத்தாடை உடுத்திக் கொண்டு, ஸ்வாமி தரிசனம் செய்வதற்கு வந்தவண்ணம் இருந்தனர். அங்கிருந்து கிளம்பி மூலத்வாரகா சென்றடைந்தோம். பகவான் தன்னுடைய சக்ராயுதத்தை சிறிது நேரம் அங்கு வைத்திருந்ததாக சொல்லப்படுகிறது. மிகவும் சிறிய கோவில் இது. அங்கிருந்து "பேட்த்வாரகா" நோக்கி புறப்பட்டோம்.

பேட்த்வாரகாவிற்குச் செல்லும் வழியில் 12 ஜோதிர்லிங்கங்களில் ஒன்றான நாகேஸ்வரரை தாருகாவனத்தில் தரிசனம் செய்தோம். இங்கிருந்து பேட்த்வாரகா செல்லும் வழியில் எல்லாம், மணல் பரப்பு கோபீசந்தனமாகவே உள்ளது. பேட்த்வாரகா சென்றடைய ஒரு பத்து நிமிடம் ஸமுத்திரத்தில் படகில் பயணம் செய்ய வேண்டி உள்ளது. இந்த படகுகளை இயக்கும் பணி Indian Navyயின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஒரு தனி படகில் பயணம் செய்து பேட்த்வாரகாவை சென்றடைந்தோம்.

6 km விஸ்தீரணத்தில் இருக்கக்கூடிய சிறிய தீவு இது. இங்குதான் பகவானை தரிசனம் செய்து, குசேலர் அவல் கொடுத்ததாக சொல்லப்படுகிறது. அங்குள்ள கோவிலில் இவைகள் எல்லாம் சித்திரங்களாக தீட்டப்பட்டுள்ளன. அது சற்றே பெரிய கோவில். நாங்கள் சென்று 10, 15 நிமிடங்களுக்கு பின்புதான் கோவில் திறக்கப்பட்டது. அனைவரும் ஸ்வாமி தரிசனம் செய்து சிறிது நேரம் கீர்த்தனம் செய்தோம். மீண்டும் படகில் ப்ரயாணம் செய்து கரையை அடைந்தோம். படகில் நாங்கள் பயணம் செய்தபொழுது சில கடல்பறவைகள் கூட்டமாக எங்களுடனே பறந்து வந்து, பயணிகள் கொடுக்கும் ஆஹாரங்களை பெற்றுச் செல்கிறது. இவை ரஸிக்க தக்கதாக இருந்தன. எல்லோருக்கும் இந்த படகு பயணம் மிகவும் பிடித்திருந்தது.

அன்று மாலை சுமார் 6 மணி அளவிற்கு ஆதி த்வாரகாவை வந்தடைந்தோம். இது ஒரு சிறிய நகரமாக உள்ளது. பல சத்திரங்களும், கோவில்களும், பஜனை மடங்களும் உள்ளன. சலவைக் கல்லால் ஆன மிகப்பெரிய பழமையான கோவில். நாங்கள் சென்ற நேரம் ஆரத்தி ஸமயம். கோவிலில் நல்ல கூட்டம். மூர்த்தி சின்மயமான மிகவும் அழகான மூர்த்தி. ஆரத்தி ஸமயத்தில் அங்கு கூடியிருந்தோர்களின் கீர்த்தனமும், வாத்ய இசையும் நன்றாக அலங்கரிக்கப்பட்ட சிறு குழந்தைகளின் நடனமும், அந்த ஜனங்களின் பக்தி பரவசமும் மெய்சிலிர்க்க வைத்தன. ஆரத்தி ஸமயத்தில் அனைவரின் மீதும் வாசனை திரவ்யங்களையும், ரோஜா மலர்களையும் ஸேவார்த்திகள் தூவுகின்றனர். அன்று இரவு, கோவில் சாத்தும் வரை, மீண்டும் மீண்டும் பகவானை தரிசித்து, நாங்கள் அனைவரும் ஆனந்தம் அடைந்தோம்.

த்வாரகையில் நம் ஸ்வாமிகள் முடிந்தபொழுதெல்லாம் த்வாதஶாக்ஷரி ஜபமும், பாகவதத்தின் தஶமஸ்கந்த பாராயணமும் செய்துவந்தார்கள். இந்த கோவிலில் அநிருத்தர், ப்ரத்யும்னர், த்ரிவிக்ரமர் போன்றவர்களுக்கு ஸந்நதிகளும் உள்ளது. கோவிலை ஒட்டியபடி ஆதிஶங்கரரால் ஸ்தாபிக்கப்பட்ட த்வாரகா ஶங்கர பீடமும் உள்ளது.

மறுநாள் காலையில் நம் ஸ்வாமிகள், மீரா சரித்திரத்தை மிகவும் உருக்கமாக உபன்யாசம் செய்தார்கள். இந்த த்வாரகா நகரம் ஶ்ரீவல்லபரால் புனர் உத்தாரணம் செய்யப்பட்டது என்றும் இந்த த்வாரகா ஆலயத்தை பற்றி ஶ்ரீமத்பாகவதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், பல காலம் மூடியிருந்த கோவில் மீரா பாடிய பிறகே திறந்தது என்றும், மீரா இதே த்வாரகாபதியுடன்தான் ஐக்கியமானாள் என்பதையும் ஶ்ரீ ஸ்வாமிகள் மிகவும் உருக்கமாக சொன்னார்கள். பிறகு நாங்கள் கோமதிநதி ஸங்கமஸ்நானத்திற்கு சென்று வந்தோம்.

நம் ஸ்வாமிகள் த்வாரகாநாத்திற்காக எடுத்துச் சென்ற வஸ்திரம் ஸமர்ப்பிக்கப்பட்டது. பூஜகர்கள் பகவானுக்கு மிகவும் **பா**வத்துடன் அலங்காரம் செய்கின்றனர். நாங்கள் அனைவரும் அன்று முழுவதும் கோவிலுக்குச் சென்று மீண்டும் மீண்டும் பகவானை தரிசித்த வண்ணம் இருந்தோம். மத்தியான ஆரத்தி நேரத்தில் ஸ்வர்ண செங்கோலும், ஸ்வர்ண புல்லாங்குழலும் பகவானுக்கு சாற்றப்பட்டது, மிகவும் அழகாக இருந்தது. மாலையில் நம் ஸ்வாமிகள், ஸந்நிதியில் **பா**வத்துடன் அனுகரணம் செய்துகொண்டே கீர்த்தனம் செய்தார்கள். இரவில், நம் ஸ்வாமிகள் தங்கியிருந்த இடத்திற்கு பூஜகர்கள் ப்ரசாதம் எடுத்து வந்து கொடுத்து ஸன்மானங்களும் பெற்றுச் சென்றனர்.

இரவு அங்கிருந்து கிளம்பி, மறுநாள் காலை மாத்ருகயா சென்றடைந்தோம். இந்த இடத்தில்தான் கபில வாஸுதேவர் தன் தாயாரான தேவஹூதிக்கு தர்ப்பணங்கள் செய்ததாக சொல்லப்படுகிறது. மேலும், யார் யார் அவரவர்களுடைய தாயாருக்காக இங்கு பித்ரு கார்யம் செய்கிறார்களோ, அவர்களுக்கும் தன் தாயார் அடைந்த உத்தம கதி கிடைக்கும் என்று கபிலவாஸுதேவர் ஆசீர்வதித்துள்ளார். பாகவதத்தில் சொல்லப்பட்ட பிந்துஶரஸ் இன்றும் அங்கு காணப்படுகிறது. நம் ஸ்வாமிகள் அங்கு ஸ்நானம் செய்தார்கள். இந்த இடம் பாகவதத்தில் அத்புதவனம் என்று அழைக்கப்பட்டுள்ளது. வந்திருந்த பக்தர்களில் சிலர் தங்களுடைய தாயாருக்காக தர்ப்பணம் செய்தனர். அங்கிருந்து கிளம்பி

மாலை அம்பாஜி என்ற க்ஷேத்ரத்தை நோக்கி புறப்பட்டோம். இந்த க்ஷேத்ரத்தை அடைவதற்கு சற்று முன்னர் நம்முடைய காமகோடி பீடாதிபதிகளால் புதியதாக நிர்மாணிக்கப்பட்ட காமாக்ஷி கோவிலை தரிசனம் செய்தோம். இங்கு 51 ஶக்தி பீடங்களின் தேவதைகளும் ஒரே இடத்தில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

பிறகு அங்கிருந்து கிளம்பி ப்ரதானமான அம்பாஜி க்ஷேத்ரத்தை அடைந்தோம். இது 51 ஶக்தி பீடங்களில் ஒன்று. தக்ஷயஜ்ஞத்தில் தாக்ஷாயணீ தன்னுடைய ஶரீரத்தை யோக அக்னியால் பஸ்பமாக்கி கொண்டது அனைவருக்கும் தெரிந்தது. அந்த அக்னி ஜ்வாலைகள் விழுந்த 51 இடமே இன்று 51 ஶக்தி பீடங்களாக விளங்குகின்றன. நாங்கள் சென்றடைந்த நாள், அம்பாளுக்கு விசேஷமான வெள்ளிக்கிழமை. கோவிலின் வெளி ப்ரகாரத்தில் நம் ஸ்வாமிகள் சிறிது நேரம் அமர்ந்து த்யானம் செய்த பின், பிறகு *''ஸிம்ஹவாஹினி நமோஸ்துதே''* என்ற கீர்த்தனம் செய்து, அம்பாளுக்கு அர்ப்பணம் செய்தார்கள்.

மறுநாள் காலை, ஆஹாரத்தை முடித்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பி புஷ்கர் செல்லும் வழியில் மாலையில் ஒரு மாட்டுக் கொட்டிலில் நம் ஸ்வாமிகள் ஸ்நானம், அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு அந்த பசுக்களுக்கு வந்தனம் செய்தார்கள். அங்கு நிறைய பசுக்களும், கன்றுகளும் இருக்க அதை பார்ப்பதற்கே மிகவும் ஸந்தோஷமாக இருந்தது. அங்கிருந்து கிளம்பி இரவு சுமார் 12 மணி அளவில் புஷ்கர் சென்றடைந்தோம்.

மறுநாள் காலையில் புஷ்கரில் உள்ள தீர்த்தத்தில் ஸங்கல்பம், ஸ்நானம் செய்தோம். இந்த தீர்த்தத்தில்தான் கஜேந்த்ர மோக்ஷம் நடந்ததாக சொல்லப்படுகிறது. மிகவும் பெரிய தீர்த்தம் புஷ்கரம். ராஜஸ்தானில் மிகவும் பழமையான இயற்கை காட்சிகள் நிரம்பிய ஊர். இதன் புராதன அழகைக் காணப் பல வெளிநாட்டு பயணிகள் உல்லாசப் பயணமாக இன்றும் புஷ்கர் வந்தவண்ணம் உள்ளனர். இந்த ஊரில் ப்ரஹ்மாவுக்கு என்று தனி கோவில் உள்ளது. அங்கு சென்று தரிசனம் செய்தோம். மேலும் ராஜஸ்தான் சேட்டுகளால் கட்டப்பட்ட ஸ்ரீநிவாஸபெருமாள் கோவிலும், ஸ்ரீவைகுண்டநாதபெருமாள் கோவிலும் உள்ளன. இந்த இரு கோயில்களிலும் நம்முடைய தமிழ்நாட்டை சேர்ந்தவர்களே பூஜை செய்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டு கோவில்களும் பொருளாதார ரீதியாகவும், பூஜாவிதான ரீதியாகவும் நன்றாக நிர்மாணிக்கப்பட்டு நடந்து வருகின்றன.

நாங்கள் சென்றிருந்த ஸமயம் ஸ்ரீ வைகுண்டநாதபெருமாள் கோவிலில் பூஜை மிகவும் விமரிசையாக நடந்துவந்தது. காலையில் ஹம்ஸ வாஹனமும், மாலையில் சூர்யப்ரபையும் ஸேவித்தோம். புஷ்கர், த்வாரகா, மதுரா மூன்று க்ஷேத்திரங்களிலும் பாகவத பாராயணம் செய்வது மிகவும் விசேஷமென்று ஸ்ரீமத் பாகவதத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. பாகவதம் முழுவதும் பாராயணம் செய்ய அவகாசம் இல்லாததால் ஸ்வாமிகள் ஏகாதஶ ஸ்கந்தம் மட்டும் பாராயணம் செய்தார்கள். புஷ்கர், த்வாரகாவைப் போன்றே ஸாந்நித்யமும் அமைதியும் நிறைந்த நகரமாகவே விளங்குகிறது. இங்கும் பல தர்மஶாலைகள் உள்ளன.

கஜேந்த்ரமோக்ஷ க்ஷேத்ரமாக இருப்பதால், *''கஜேந்திர வரதா விஜயதே''* என்று ஸ்வாமிகள் கீர்த்தனம் செய்து பகவானுக்கு அர்ப்பணம் செய்தார்கள். மாலையில் சுமார் 4 மணிக்கு கிளம்பி, ஸ்வாமிகளுடன் தீர்த்த ப்ரிக்ரமா செய்தோம். பரிக்ரமா மார்க்கத்தில் உள்ள பல ஸாதுக்களின் பஜனை மடங்களுக்கும் சென்று வந்தோம்.

மறுநாள் காலை வைகுண்டநாத பெருமாள் கோவில் கருடவாஹன புறப்பாடு தரிசனம் செய்து விட்டு புஷ்கரிலிருந்து கிளம்பி நேராக காங்க்ரோலி த்வாரகா சென்றடைந்தோம். இதுவும் சற்று உயரத்தில் உள்ள ஓர் கோவில். Bus-லிருந்து இறங்கி அனைவரும் Autoவில் சென்று தரிசனம் செய்தோம். சுவற்றில் அன்னகூடஉத்ஸவ சித்திரம் அழகாக வரையப்பட்டிருந்தது.

அங்கிருந்து கிளம்பி, ஸ்ரீநாத் த்வாரகாவை சென்றடைந்தோம். ஸ்ரீநாதன் மிகவும் ஸௌகுசானமூர்த்தி. பூமியின் அடியிலிருந்து தானே ஆவிர்ப்பவித்த மூர்த்தி. இன்றும் வல்லப ஸம்ப்ரதாயத்தை சேர்ந்தவர்களே (புஷ்டிமார்கடம்) பூஜை செய்துவருகின்றனர். மிகவும் பெரிய கோவில். ஒரு நாள் ஆராதனத்திற்கு சுமார் ஒரு லக்ஷரூபாய்க்கு மேல் செலவு செய்யப்படுகிறது. தினமும் யமுனையிலிருந்து தீர்த்தம் விசேஷமாக கொண்டு வரப்படுகிறது. அதேபோல், குங்குமப்பூ காஷ்மீரிலிருந்தும், வெற்றிலை தமிழ்நாட்டில் இருந்தும், மற்றும் பல தேவையான ஆராதனை பொருட்கள் பல ஊர்களிலிருந்தும் விசேஷமாக தருவிக்கப்படுகின்றன.

ஆரத்தி ஸமயத்தில் 5 அல்லது 10 நிமிடங்கள்தான் திரையை விலக்குகின்றனர். கூட்டம் அலைமோதுகின்றது. அந்த 10 நிமிடத்திற்குள் ஸ்ரீ நாதனைப் பார்த்தால் தான் உண்டு. காலையில் குளிர்காலமாக இருப்பதால் பகவானுக்கு மேனி முழுவதும் கம்பளியால் போர்த்தி ஸேவை ஸாதிக்கின்றனர். அதே போல், அந்தந்த காலங்களில் விசேஷமாக

அலங்காரங்கள் செய்யப்படுகின்றன. பகவானுக்கு ஸமர்ப்பிக்கப்படும் லட்டு, மைசூர்பாக் எல்லாம் அளவில் பெரியதாக உள்ளன. 72 விதமான பக்ஷணங்கள், "ராஜ்போக்" என்ற விசேஷ பக்ஷணம் தினமும் செய்யப்படுகின்றன. தங்க யந்திரம், வெள்ளி யந்திரம் எல்லாம் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. பகவானுடைய பக்ஷண நிவேத்யத்திற்கு தேவையான நெய்யைப் பாத்திரத்தில் சேர்த்து வைத்து இருப்பது நெய்க்கிணறு போல் தோன்றுகிறது.

காலையில் பாலக்ருஷ்ணனை ஒரு ஊஞ்சலில் எழுந்தருளச் செய்து, அவனுக்கு முன் பல வெள்ளி கேளிக்கை சாமான்களால் விளையாட்டு காட்டுகின்றனர். மற்றும் தாயகட்டை, Chess எல்லாம் பகவானுடன் விளையாடுகின்றனர். இந்த கோவிலைப் ப்ரதானமாக கொண்டே இந்த ஊர் அமைந்துள்ளது. இந்த ஊர் கடைகளில் எல்லாம் பகவானுக்கு அலங்காரம் செய்யும் பொருட்கள் விதம் விதமாக கிடைக்கின்றன. ஸ்ரீநாத் த்வாரகாவில் நம் ஸ்வாமிகள், ஸ்ரீவல்லப சரித்ரத்தை சுருக்கமாக உபன்யாஸம் செய்தார். அங்கிருந்து கிளம்பி, உதய்பூரில் சில புராதன இடங்களைப் பார்த்துவிட்டு Dakor Dwaraka சென்றடைந்தோம். இது ஒரு நடுத்தரமான கோவில். குஜராத்தில் உள்ள அநேக பக்தர்களுக்கு இது ஓர் ப்ரார்த்தனை ஸ்தலமாக விளங்குகின்றது. பௌர்ணமி, ஹோலி, தீபாவளி போன்ற நாட்களில் லக்ஷக்கணக்கான ஜனங்கள் கூடுகின்றனர். அங்கிருந்து அஹமதாபாத்தை சென்றடைந்ததோடு எங்களுடைய பஞ்சத்வாரகா யாத்திரை ஸ்ரீ ஸ்வாமிகள் க்ருபையால் சுபமாக பூர்த்தி அடைந்தது.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

| | |
|---|---|
| முன் அட்டைப்படம் : | ஸமீபத்தில், ஸ்ரீ ப்ருந்தாவனத்தில் யமுனைக் கரையில் மாதுரிஸகீ ஸமேத ப்ரேமிக வரதனுக்கு நம் ஸ்வாமிகள் அர்ச்சனை செய்கின்றார்கள். |
| பின் அட்டைப்படம் : | அதே ஸ்ரீவனத்தில், மாதுரி ஸகீ ஸமேத ப்ரேமிகவரதனுக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் ஸஹஸ்ரதாரையால் திருமஞ்சனம் செய்கின்றார்கள். |
| Photos by : Delhi Sukumar | |

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் நாமமாலிகா ஸ்தோத்ரம்

ஸ்ரீநிவாஸக்ருபாபாத்ரம் ஶ்ரிதார்த்திஹரவல்லபம் ।
ஸ்ரீமத்பாகவதே மக்னம் ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 1

முரளீதரநாமானம் மஹாரண்ய நிவாஸினம் ।
மோக்ஷதர்மப்ரவக்தாரம் ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 2

ரமணீயமுகாம்போஜம் ராகத்வேஷவிவர்ஜிதம் ।
ராதாகல்யாணநிர்மக்னம் ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 3

லீலயா பக்தபாபக்னம் லீலாமாதவபூஜகம் ।
லோகக்ஷேமகரம் த்யேயம் ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 4

தர்மக்ஞம் தர்மவக்தாரம் த்யானாவஸ்திதவிக்ரஹம் ।
தர்மாசரணஸம்பத்தம் ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 5

ரஸஸ்வரூபநிஷ்ணாதம் ரங்கநாதாங்க்ரிபூஜகம் ।
ராமக்ருஷ்ணாதிமந்த்ரக்ஞம் ஸத்குரும் ப்ரணமாம்யஹம் 6

குரும் பரமகல்யாணம் குருமண்டலபூஜகம் ।
கோபால க்ருஷ்ணஸம்பூஜ்யம் ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 7

ருக்ணபீதிஹரம் ஶாந்தம் ருக்மிணீக்ருஷ்ணஸேவகம் ।
ரூபௌதார்யகுணோபேதம் ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 8

வர்ணாஶ்ரமகுணாதீதம் வசனாம்ருதஸாகரம் ।
வேதரக்ஷாகரம் வந்த்யம் ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 9

யாகயஜ்ஞாதிகர்தாரம் யஶோகுலங்க்ருதரூபகம் ।
யாத்ராபூஜாஸுஸம்ஸக்தம் ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 10

யத்ருச்சாலாபஸந்துஷ்டம் யமாதிநியமாந்விதம் ।
யோகஜ்ஞம் யோககம்யம் தம் ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 11

நதாபவர்கதம் நம்யம் நாமகீர்த்தனலோலுபம் ।
நாமப்ரசாரநிரதம் ஸத்குரும் ப்ரணமாம்யஹம் ॥ 12

மஞ்ஜுபாஷிணமக்ஞேயம் மஹாபுண்யபலோதயம் ।
மணிமாலாதிஸம்யுக்தம் ஸத்குரும் ப்ரணமாம்யஹம் 13

– ப்ரஹ்மஸ்ரீ P. கோபாலக்ருஷ்ணன்

# நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 23

- நித்யாக்னிஹோத்ரி ப்ரஹ்மஸ்ரீ A. ஸுந்தரேச ஶர்மா வாஜபேயயாஜி

## பூரட்டாதி

அஜஏகபாத் என்ற தேவதையை கொண்டது பூரட்டாதி நக்ஷத்ரம். ஶர்வ தெய்வங்களும் வணங்கக்கூடிய தேவதையென்றும், ஸகலவித கஷ்டங்களையும் போக்கக்கூடிய தேவதையென்றும் கூறப்பட்டுள்ளது. இந்த பூரட்டாதி நக்ஷத்ரத்தின் உருவம் நீளமான கட்டிலின் இரண்டு கால்கள் போல் ஆகாயத்தில் தெரிவதாக வான ஶாஸ்த்ரக்ஞர்கள் கூறுகிறார்கள். கார்த்திகை மாதம் 18-ந் தேதி முதல் 30-ந் தேதி முடிய நக்ஷத்ரோதய காலத்தில் ஆகாயத்தில் காணலாம் என்று கூறுகின்றார்கள். பொதுவாக, பூரட்டாதி நக்ஷத்ரம் ஸுப கார்யங்களுக்கு விலக்கு என்பர்.

பூரட்டாதியில் பிறந்தவர்கள் எதிலும் அதிகம் கவலைகொண்டு நல்லபடியாக நடப்பார்கள். பயம் என்பது இவர்களுடன் பிறந்தது. ஸ்த்ரீகள் வார்த்தைக்குக் கட்டுப்படக்கூடிய ஸ்வபாவம் கொண்டவர்கள். இவர்களுக்கு பணத்திற்கு பஞ்சம் ஏற்படாது. இவர்களுடைய பணத்தை ஸ்த்ரீகள் அதிகமாக செலவு செய்துவிடுவர். ஸம்பாதிப்பதில் ஓயமாட்டார்கள். எல்லோரிடமும் நன்கு பேசி பழகுவார்கள். ஸாமான்யமாக பிறருக்கு பணஉதவி செய்வதில் ஈடுபடமாட்டார்கள். எல்லோரையும் தன் பேச்சினால் வசப்படுத்தி விடுவார்கள். ஸாமர்த்தியமாக தன் ஐஶ்வர்யத்தை காப்பாற்றிக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருப்பர். நல்ல அழகு உடையவர்களாக இருப்பார்கள்.

நல்லோர்களது சேர்க்கை இவர்களுக்கு அமைந்தால் தெய்வீகமான காரியங்களில் மிகவும் ஈடுபட்டு உலக நலனுக்கு பாடுபடும் வாய்ப்பும் இவர்களுக்கு கிடைக்கலாம். இவர்களுக்கு நல்ல குரு அமையும் வாய்ப்பும் கிட்டும். அதை உபயோகப்படுத்திக்கொண்டு மேன்மைகளை அடையலாம்.

---

*குருவின் அருகாமையில் இருக்கும் சீடன் அவரிடமே குறைகளை கண்டுபிடிக்க ஆரம்பித்து விடுவான். அது அவனுடைய ஆன்மீக முன்னேற்றத்தைப் பாதிக்கும்.*

**- பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : **பா**வம்தான் பக்தி என்று தாங்கள் அடிக்கடி கூறுகின்றீர்கள். ரஸமான **பா**வத்தை எப்படி வளர்த்துக் கொள்வது?*

ஸ்ரீஸ்வாமிகள் : சித்திரம் வரைவது ஒரு கலை. அது எல்லோருக்கும் வருவதில்லை. சித்திரம் வரைய தெரியாதவன் சித்திரம் வரைய முயற்சி செய்தால், அது சரியாக அமையாது. இது போல் நடனம், ஸங்கீதம் இவை எல்லாம் ஒரு கலை. சில நபர்களுக்கு இவைகள் பூர்வ ஜன்ம வாஸனையால் ஸுலபமாக ஏற்படும். அப்படி இல்லாதவர்கள் தகுந்த குருவை கொண்டு இவைகளை எல்லாம் கற்று கொள்கின்றனர். அதுபோல் பக்தியில் **பா**வங்கள் ஏற்படுவது சிலருக்கு ஜன்மாந்த்ர வாஸனையால் ஏற்படும். நல்ல **பா**ஷுகர்களின் (பக்தர்களின்) ஸங்கத்தால், ரஸமான **பா**வங்கள் நமக்கும் ஏற்படும்.

*கேள்வி : நான் எப்பொழுதும் ராமநாமம், ஜபம், ஸத்ஸங்கம் என்று இருந்து வந்தேன். என்னுடைய குடும்பத்தில் பல விதமான கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளன. நான் குடும்பத்தை கவனிக்காமல் இருப்பதால்தான் இப்படி ஏற்பட்டுள்ளது என்று என் நண்பர்கள் கூறுகின்றனர்.*

பதில் : அவர்கள் அறியாதவர்கள். அவர்கள் அப்படி கூறுவது தவறு இல்லை. ஆனால் தாங்கள் இவ்வளவு தூரம் ஸத்ஸங்கத்தை அனுபவித்தும், பக்தி தத்துவங்களை தெரிந்துகொண்டும் இப்படி சொல்வதுதான் தவறு. உலகத்தில் இது போல் இல்லாமல், குடும்பத்தை ரொம்ப ஶ்ரத்தையுடன் கவனித்து வருபவர்களுக்கு மட்டும் துக்கம் ஏற்படுவதில்லையா என்ன?. எல்லாவற்றிற்கும் காரணம் ஈஶ்வரனின் ஸங்கல்பமே என்று எடுத்துக்கொள்ள பழக வேண்டும். நாம், நல்ல காரியங்களில் நம்மை ஈடுபடுத்திக்கொள்வதால் வரவேண்டிய துக்கத்தின் அளவு குறையும். ஆனால் நமக்கு என்ன நேர இருந்தது, அது என்னவாகி வந்துள்ளது என்பது எல்லாம் நமக்கு புரியாததால்தான் நம்முடைய புத்தி தடுமாறுகின்றது. நல்லது பண்ணுகிறவர்களுக்கு ஒருக்காலும் கெடுதல் வராது. இது பகவானின் வாக்காகும்.

*கேள்வி : மனது, தீவிரமாக ஆன்மீக நாட்டம் கொள்ள என்ன செய்ய வேண்டும்?*

பதில் : இந்த உலகை எவ்வளவுக்கெவ்வளவு நிஜம் என்று நினைக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நம் மனது உலக விஷயங்களை நோக்கி ஓடும். இந்த உலகம் பொய் என்பதையும், நமக்கு எப்பொழுதும் மரணம் ஏற்படலாம், அப்பொழுது நாம் ஸேமிக்கும் எதுவும் நமக்கு உதவப்போவதில்லை என்பதுமே, தீவிரமாக நாம் நம்மை ஸாதனைகளில் ஈடுபடுத்திக் கொள்ள உதவும்.

*கேள்வி : பூஜை செய்தால் க்ரமப்படி செய்ய வேண்டும், ஏதாவது தவறு நேர்ந்து விட்டால் விபரீதமான பலன்கள் ஏற்படும் என்று பலர் கூறுவதால் எனக்கு பூஜை செய்யவே பயமாக உள்ளது. அதுபோல், ஸாதுக்களுடன் பழகும்பொழுது அவர்களிடம் அபசாரப்படக்கூடாது என்றெல்லாம் கூறுகின்றார்கள். இவைகளை எல்லாம் பார்க்கும்பொழுது, எனக்கு பூஜை செய்வதைவிட பேசாமல் இருப்பதும், ஸாதுக்களிடம் பழகுவதைக் காட்டிலும் சும்மா இருப்பதே ஶ்ரேஷ்டம் என்று தோன்றுகின்றது. இதற்கு உங்கள் கருத்து என்ன?*

பதில் : மின்சாரம், கேஸ், நெருப்பு போன்றவைகளை, நாம் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துகின்றோம். இவைகளிடம் கூட நாம் ஜாக்கிரதையாக இல்லாவிட்டால் அழிவையே ஏற்படுத்தும். அதற்காக, யாரும் இவற்றை உபயோகப்படுத்தாமல் இல்லையே. தெய்வீக விஷயங்களில் உங்களுக்கு இப்படி தோன்றுகின்றதென்றால், அது விஷயத்தில் உங்களுக்கு போதிய நாட்டமின்மையையே காட்டுகின்றது. நீங்கள் அப்படி பயப்பட வேண்டிய அவசியமில்லை. தெய்வமும் மஹாத்மாக்களும் கருணை உள்ளவர்கள். உங்களுக்கு ஒருக்காலும் எந்த கெடுதலையும் ஏற்படுத்த மாட்டார்கள்.

---

ஒரு தந்தை சேகரிக்கும் அத்தனை சொத்தும் எப்படி அவருடைய வாரிசுகளுக்குத்தான் என்பது ஸர்வ நிச்சயமோ, அதுபோல் ஒரு மடாதிபதியின் சொத்து அந்த மடத்தை சேர்ந்த வித்வான்களையே சாரும்.

**- பூஜ்யஶ்ரீ முரளீதர ஸ்வாமிகள்**

# வேத கதைகள் - 24

- தர்மக்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேச ஶாஸ்த்ரிகள்

## வஜ்ராயுதத்தின் தோற்றம்

இந்திரன், வ்ருத்ரன் என்ற அரக்கனுடன் போர் புரிந்தான். எவ்வளவு திறமையாக போர் புரிந்தும் இந்திரனால் வ்ருத்ரனை வெல்ல முடியவில்லை. வ்ருத்ரனை வெல்வதற்கு வேறு உபாயம் ஒன்றும் தோன்றாமல் நான்முகனை வேண்டினான் இந்த்ரன். ப்ரஹ்மா அவன் முன் தோன்றி, ததீசி என்ற ஒரு முனிவர் இருக்கிறார். அவர் முதுகு எலும்பை பெற்று அதைக் கொண்டு வஜ்ராயுதம் செய்தால் வ்ருத்ரனை கொல்லலாம் என்று உபாயம் கூறினார்.

முன்பு ஒரு ஸமயம், அரக்கர்களிடம் தேவர்களை கொல்லக்கூடிய பயங்கரமான ஆயுதங்கள் இருந்தன. அதனால், அரக்கர்கள் வெற்றி பெற்றார்கள். தேவர்கள் அழிந்தனர். இதனால் வருந்திய தேவர்கள் செய்வது அறியாது திகைத்து நின்றனர். அந்த கஷ்டமான நிலையில் ப்ரஹ்மாவை ஶரண் அடைந்தனர். அப்பொழுதும் ப்ரஹ்மா ததீசி முனிவரை சரணம் அடையுங்கள். அவர் ஏதாவது உபாயத்தினால் ஏதாவது நன்மை செய்வார் என்று கூறினார்.

தேவர்களும் ததீசி முனிவரை ஶரணடைந்தனர். ததீசி முனிவரும் தன் தவவலிமையினால் அரக்கர்களிடம் உள்ள எல்லா ஆயுதங்களும் தன்னிடம் வரவேண்டும் என்று எண்ணினார். அவர் எண்ணிய அடுத்த க்ஷணத்திலேயே அரக்கர்களின் ஆயுதங்கள் அவரை வந்து அடைந்தன. தன் யோக சக்தியால் அந்த ஆயுதங்களை ஜலமாக ஆக்கி குடித்து விட்டார். அரக்கர்களின் எல்லா ஆயுதங்களின் சக்தியும் அவர் முதுகு எலும்பில் தங்கியது. இதை மனதில் வைத்து வ்ருத்ரனை கொல்ல முடியாத இந்திரனுக்கு ததீசி முனிவரின் முதுகு எலும்பைப் பெற்று அதை கொண்டு வஜ்ராயுதம் செய்து வ்ருத்ரன் மேல் ஏவினால் வ்ருத்ரன் அழிவான் என்று ப்ரஹ்மா கூறினார். தேவர்கள் மறுபடியும் முதுகு எலும்பிற்காக ததீசி முனிவரை ஶரணடைந்தனர். அவா உயிரோடு இருந்தால் முதுகு எலும்பை எடுக்கமுடியாது. ஆதலால் தேவர்களுக்கு நன்மை செய்ய விரும்பிய ததீசி முனிவர், தன் உயிரை துறந்தார். உயிரற்ற அவர் உடலில் இருந்து முதுகு

எலும்பை எடுத்து வஜ்ராயுதம் செய்து இந்திரனிடம் கொடுத்தனர். இந்திரன் அதைப் பெற்றான். ஜலங்களுக்கு அரக்கர்களை கொல்லும் சக்தி இயற்கையாகவே உண்டு. *ஆபோவை ரக்ஷோக்னீ:* என்று வேதம் கூறுகிறது. அபார சக்தி உள்ள ததீசி முனிவரின் முதுகு எலும்பால் செய்யப்பட்ட வஜ்ரத்தை ஜலத்தில் நனைத்து வ்ருத்ரன் மேல் எரிந்தான் இந்த்ரன். *(தஸ்மை வஜ்ரம் ஸித்வா ப்ராயச்சத்)* வஜ்ரத்தால் அடிபட்ட வ்ருத்ரனும் விழுந்து மடிந்தான்.

இவ்விதம் ததீசி முனிவர் தான் உயிரோடு இருக்கும்பொழுதும் தேவர்களை துன்புறுத்துகிற அரக்கர்களின் ஆயுதங்களை ஜலமாக்கி குடித்து தேவர்களுக்கு உதவி புரிந்தார். தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி உயிரை விட்டும் தன் முதுகு எலும்பால் தேவர்களுக்கு உதவி புரிந்தார். இந்த வரலாறு க்ருஷ்ண யஜுரி வேதம் ஐந்தாவது ப்ரஸ்னம் *(இந்த்ரோ ததீசோ அஸ்தபி:)* என்ற அனுவாகத்தில் கூறப்பட்டிருக்கிறது. இதனால் நல்லோர்கள் உயிருடன் வாழும் பொழுதும் எல்லோருக்கும் நன்மை செய்வார்கள். நல்லோர்கள் இறந்தாலும் அவர்கள் உடல் கூட உலகிற்கு நன்மை புரியும் என்ற உண்மை நமக்கு புரிகிறது. ■

---

## அறிவிப்பு

ஸ்ரீ ஹரி:

**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**

சென்னை - 600 083.

### மதுரமுரளி வருடசந்தா

"மதுரமுரளி"க்கான வருடசந்தா ஜூன் '99 இதழுடன் முடிவடைகிறது. ***"குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்"*** என்னும் பெயரில் மட்டுமே ரொக்கம் / M.O. / காசோலை / DD யாக ரூ. 60/-ஐ தங்கள் பெயர், முகவரி, சந்தா எண், தொலைபேசி எண் உள்ளிட்ட விவரங்களுடன் உடனே அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி:
திரு. V. சங்கரன்,
மதுரமுரளி,
5/3, MIG Flats, பி.டி. ராஜன் சாலை,
கே.கே.நகர், சென்னை - 600 078.
Phone : 4714327

# எந்தரோ மஹானுபாவுலு - 12

ஸ்ரீ ஆளவந்தாரின் உடல் நிலை நாளுக்கு நாள் க்ஷீணமாகிக் கொண்டே வந்தது. ஒரு நாள், காஞ்சிபுரத்திலிருந்து இரு வைஷ்ணவர்கள் வந்து ஆளவந்தாரை ஸேவித்தனர். அவரது நோய் பற்றிக் கேள்விப்பட்டு அவரை தரிசிக்க வந்திருந்தனர். அவர்களிடம் ஆளவந்தார் ராமானுஜரைப் பற்றி விசாரித்தார். இருவரும், ராமானுஜர் யாதவ ப்ரகாசரிடம் பாடம் படிப்பதை நிறுத்திவிட்டு தாமே ஶாஸ்த்ரங்கள் பயின்று வருவதையும், திருக்கச்சிநம்பியின் உத்திரவின்பேரில் தினமும் பேரருளாளனுடைய திருமஞ்சனத்துக்காக சாலைக்கிணற்றுதீர்த்தம் எடுத்துச்செல்வது பற்றியும் கூறினர்.

இதைக்கேட்டு ஆளவந்தார் மிக்க மகிழ்ச்சி அடைந்தார். ஸ்ரீ வைஷ்ணவ ஸமயத்திற்கு நல்ல காலம் பிறந்துவிட்டது என ஆனந்தம் அடைந்தார். அந்த நிமிடமே, அவர் பெருமாளை துதித்து, எட்டு ஸ்லோகங்கள் இயற்றினார். பெரியநம்பியைக் கூப்பிட்டு சிறிதும் தாமதமின்றி ராமானுஜரை காஞ்சிபுரத்திலிருந்து அழைத்துவந்து தம்மிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்று ஆக்ஞாபித்தார். உடனே பெரியநம்பி ஆசாரியனின் திருவடிகளை வணங்கி, காஞ்சிபுரத்திற்கு பயணமானார்.

ஸ்ரீஆளவந்தாரின் தேக நிலையை அறிந்த பெரியநம்பி துரிதமாக காஞ்சிபுரத்தை அடைந்தார். அங்கு திருக்கச்சிநம்பியை ஸந்தித்து ஆளவந்தாரின் திருஉள்ளக்கிடக்கைப் பற்றி சொன்னார். இருவருமாக, வரதராஜனை ஸேவித்துப் ப்ரார்த்தித்துக்கொண்டு சாலைக்கிணற்றை நோக்கி நடந்தனர். சிறிது தூரத்தில் ராமானுஜர் தோளில் குடத்துடன் வருவதைக் கண்டனர். திருக்கச்சிநம்பி தனக்கு கோவிலுக்குப் போகும் ஸமயமாகி விட்டதால், பெரியநம்பியையே ராமானுஜரை ஸந்தித்து, வந்த விஷயத்தை தெரிவிக்குமாறு சொல்லிவிட்டு கோவிலுக்கு புறப்பட்டார்.

பெரியநம்பி ஸ்ரீ ஆளவந்தாரின் ஸ்தோத்திரத்திரத்திலிருந்து சில ஸ்லோகங்களை உரத்த குரலில் பாடினார். ராமானுஜர் அந்த ஸ்தோத்ரத்தை, சித்திரம் போல் நின்று அனுபவித்து செவியுற்றார். பிறகு மிகவும் பணிவுடன் இனிய குரலில், பெரியநம்பியிடம் சென்று இந்த ஸ்லோகங்களை இயற்றியவர் யார்?, அதிகாலையில் இந்த தூய ஸ்லோகங்களைக் கேட்டு நான் பெரிய பேறுபெற்றேன். இதை இயற்றியவருக்கு மீண்டும் மீண்டும் என் வந்தனங்கள் என்று கூறினார்.

உடனே பெரியநம்பி, ''இவை எனது ஆசார்யன் ஆளவந்தார் இயற்றிய ஸ்லோகங்கள்'' என்றார். ஆளவந்தாரின் பெயரைக் கேட்டதுமே ராமானுஜர், ''ஸ்வாமி! அந்த மாமுனிவர் தற்சமயம் நோயுற்றிருப்பதாக செவியுற்றேனே! அந்த மஹானுடைய திருவடி நிழலைவிட்டு தேவரீர் புறப்பட்டு எத்தனை நாட்கள் ஆகின்றன?'' என வினவினார். உடனே பெரியநம்பி தான் கிளம்பிவரும் ஸமயம் ஆளவந்தாருக்கு நோய் சற்று குணமாகி இருந்தது என்றார். ராமானுஜர் அவரிடம் காஞ்சிபுரம் எழுந்தருளிய நோக்கம் என்ன என்று கேட்டார். பெரியநம்பி, ''ஆளவந்தார் ஸதா நினைவில் கொண்டிருக்கும் உங்களைப் பார்க்கத்தான் என்னை அனுப்பி இருக்கிறார்'' என்றதும் ராமானுஜர் வியப்படைந்தார். ''அந்த தெய்வீக மாமனிதர், கடையனான அடியேனை நினைவில் கொண்டிருக்கிறாரா?'' என்று கேட்டார்.

''அடியேனுடைய ஆசார்யன் தற்சமயம் நோயினால் திருமேனி மெலிந்து நலிந்துள்ளார். அவர் தங்களை காண பெரிதும் விரும்புகிறார். நீங்கள் அவர் விருப்பத்தை நிறைவேற்ற விரும்பினால் உடனே அவரை தரிசிக்கப் புறப்படவேண்டும்'' என்று பெரியநம்பி சொன்னதும் ராமானுஜர் பேரானந்தம் அடைந்து ''சற்று பொறுங்கள்; இந்த தீர்த்தகுடத்தை கோவிலில் சேர்ப்பித்துவிட்டு நாம் உடனே ஸ்ரீரங்கம் புறப்படலாம் என்றார். ஆளவந்தாரிடம் ராமானுஜருக்கு உள்ள தீவிர பக்தியை கண்டு பெரியநம்பி வியந்தார். இருவருமாக ஸ்ரீரங்கத்தை நோக்கி வேகமாக நடக்கலாயினர். பகலில் எங்கேயாவது பிக்ஷையேற்று, இரவில் யார் வீட்டுத் திண்ணையிலாவது இளைப்பாறி ஸ்ரீரங்கத்திற்கு நான்கு நாட்களில் வந்து சேர்ந்தார்கள்.

பெரியநம்பி காஞ்சிபுரத்துக்கு கிளம்பிய உடன் ஆளவந்தார் மீண்டும் நோய்வாய்ப்பட்டார். இந்தத் தடவை, நோயின் கடுமை மிக அதிகமாக இருந்தது. இந்த நிலையிலும், அவர் தமது நித்திய கடமைகளைச் செய்து கோயிலுக்குச் சென்று அரங்கனை தரிசித்து ப்ரஸாதம் பெற்று மடத்துக்கு திரும்பி வந்தார். ஒரு நாள் நண்பகலில் அவருடைய சீடர்கள் உணவுண்ட பின்பு தமது இல்லற சீடர்களை அழைத்துவருமாறு பணித்தார். அனைவரையும் நோக்கி தாம் ஏதாவது குற்றம் செய்திருந்தால் மன்னிக்கும்படி வேண்டினார். திருவரங்கப் பெருமாளரையரையும் மற்ற சீடர்களையும் மடத்தின் சீடர்கள் பொறுப்பில் ஒப்படைத்தார்.

பிறகு ''நீங்கள் நாள்தோறும் அரங்கனுக்கு தொண்டாற்ற வேண்டும். தூய நன்மலர்களை அவனுக்கு சூட்டி வணங்கவேண்டும். உங்கள்



ஆசார்யனிடம் எப்போதும் பக்திகொண்டு, விருந்தினர்களுக்கு தொண்டாற்றுங்கள். இதனால் உங்களுக்கு தினமும் அறிவும் தூய்மையுற்று, அதன் பயனாக இறைவனை விரைவில் காண்பீர்கள்'' என்று சொன்னார். பிறகு அவர் பத்மாசனத்தில் அமர்ந்தார். மனதை அடக்கி உள்ளத்தில் நிலைநிறுத்தினார். சீடர்கள் பரமனின் பெருமையை பாடல்களாக இனிமையாக பாடிக் கொண்டிருந்தனர். வேப்பங்குழலும், மற்ற வாத்தியங்களும், கீர்த்தனத்தை மேலும் மதுரமாக்கின. அனைவரின் முகத்திலும் ஒருவகைத் தெய்வீக பேரானந்த ஒளி வீசியது. ஆளவந்தார், மெதுவாக தமது மனதை மேலெழச் செய்து புருவமத்திக்கு கொணர்ந்து நிறுத்தினார். அவர் கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் பெருக, உடல் புல்லரித்து நடுங்கியது. இறுதியில் சுழுமுனை நாடி வழியாக கபாலத்தை பிளந்துகொண்டு தனது ப்ராணனை போகவிட்டு பரமனுடன் கலந்தார்.

கீர்த்தனம் திடீரென்று நின்றது. திருக்கோட்டியூர்நம்பியும் மற்றச் சீடர்களும் கோவென்று கதறினர். சிலர் மயக்கமுற்று தரையில் சாய்ந்தனர். சிறிது நேரம் கழித்து சுதாரித்துகொண்டு அவரது அந்திமக்கிரியைக்கு ஏற்பாடு செய்தனர். அவரது திருமேனியை புனித நீரினால் நீராட்டி, புதிய பட்டாடை அணிவித்து ப்ரஹ்மரதத்தில் எழுந்தருளச் செய்தனர். அனைவரும் ரதத்துடன் சென்று காவேரிக்கரையை அடைந்தனர். கொள்ளிடத்தின் தென்கரையில் அவரது அந்திமக் கிரியைகள் நடந்தபொழுது ஆயிரக்கணக்கான ஸ்ரீரங்கவாசிகள் குழுமி இருந்தனர்.

பெரியநம்பியும் ராமானுஜரும் காவிரியைக் கடந்து கோவிலுக்கு அருகில் உள்ள மடத்தை அடைந்தபோது அங்குள்ள பெருங்கூட்டத்தை பார்த்து, ''ஏன் இவ்வளவு கும்பல்?'' என்று அவர்களிடம் கேட்டார்கள். ஒருவர் ''ஸ்வாமி! என்னவென்று சொல்ல? விலை மதிக்க இயலாத ஒரு மஹாரத்னத்தை உலகம் இழந்துவிட்டது. மஹாத்மா ஆளவந்தார் நம்மைவிட்டு விட்டு சென்றுவிட்டார்'' என்றதும், ராமானுஜர் மயக்கமடைந்தார். பெரியநம்பி ஓவென்று கதறி ''எனக்கு இப்படி இழப்பு நேர்ந்ததே! தெய்வமே! இதற்காகவா என்னை காஞ்சிபுரம் அனுப்பினாய்?,'' என ஓலமிட்டார். பிறகு மயக்கமான நிலையில் உள்ள ராமானுஜரைக் கண்டு தண்ணீர் தெளித்து, அவரை எழுப்பி ''குழந்தாய், நீ என்ன செய்வாய்? பரமனுடைய விருப்பப்படி நடக்கவேண்டியது நடந்து விட்டது. ஆளவந்தாரே எப்போதும் இறைவனுடைய கட்டளைக்குப் படியும்படி எங்களிடம் சொல்லியிருக்கிறார். நாம் இப்போதே சென்று அவரது திருமேனியையாவது தரிசிப்போம்'' என்று கூறினார்.

ராமானுஜரும் பெரிய நம்பியும் ஆற்றங்கரைக்கு சென்று பெருந்துயிலில் ஆழ்ந்திருந்த ஆளவந்தாரைக் கண்டனர். பெரியநம்பி அவர் திருவடிகளை வணங்கிக் கண்ணீரால் நீராட்டினார். ராமானுஜர் கண்களில் தாரை தாரையாக நீர்பெருக அசையாமல் நின்றிருந்தார். ஒப்பற்ற ஆளவந்தாரின் தெய்வீக வடிவத்தை கண்கொட்டாமல் நோக்கினார். அனைவரும் ஆச்சர்யத்துடன் உயிருடன் இருப்பவர், உலகைப் பிரிந்தவருடன் ஏதோ உரையாடுவதுபோல் தொடர்புகொள்வதைக் கண்டனர். சிறிது நேரம் கழித்து ராமானுஜர், "இவர் வலக்கையில் மூன்று விரல்கள் மடங்கி மூடி இருக்கின்றனவே, இவர் உயிருடன் இருந்தபோதும் இப்படித்தான் இருந்தனவா?! என்று கேட்டார். சீடர்கள், "இல்லையே! ஆசார்யன் விரல்கள் நேராகத்தானே இருந்தன. இப்படி ஏன் உள்ளன என எங்களுக்குத் தெரியவில்லையே" என்றனர்.

இதைக் கேட்டதும் ராமானுஜர் உரக்கத் திருவாய் மலர்ந்தருளினார். "அடியேன் திருமாலின் நெறியில் வாழ்ந்து மக்களின் அறிவின்மையை நீக்கி, அவர்களுக்கு பஞ்சஸம்ஸ்காரம் செய்வித்து, திவ்யப்ரபந்தங்களில் வல்லவர்களாக்கி, நம்மாழ்வாரின் புகழை நிலைநாட்டி பரப்புவதில் ஈடுபடுவேன். மக்களுக்கு நல்வழிகாட்ட ப்ரஹ்மஸூத்ரத்திற்கு ஸ்ரீபாஷ்யம் இயற்றுவேன். விஷ்ணுபுராணத்தை இயற்றிய பராஸர முனிவருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மிகப் பெரிய கற்றறிந்த ஒரு வைணவனுக்கு அவரது திருப்பெயரை இடுவேன்" என்று மூன்று சபதங்களை செய்தார். ஒவ்வொரு சபதம் செய்ய செய்ய, ஆளவந்தாரின் விரல்கள் ஒவ்வொன்றாக நிமிர்ந்து நேராகியது. அனைவரும் பெருவியப்பில் ஆழ்ந்தனர். தங்களுக்கு அடுத்த ஆசார்யன் கிடைத்துவிட்டதை சந்தேகமற உணர்ந்து கொண்டனர். ராமானுஜர் ஆளவந்தாரின் திருமேனியை திருப்பள்ளிப்படுத்துமுன் காஞ்சீபுரத்துக்கு புறப்பட்டு விட்டார். யாரையும் கண்ணெடுத்தும் பார்க்காமல், யாருடைய பேச்சுக்கும் செவி சாய்க்காமல் தமது சிந்தனையிலேயே ஆழ்ந்து, அங்கிருந்து புறப்பட்டு காஞ்சிபுரம் அடைந்தார். இளமைக்கு உரிய விளையாட்டுத்தனம் அவரிடமிருந்து மறைந்தது. சீரிய சிந்தனைக்கு உரிய கம்பீரத்தன்மையை அவரது திருமேனி அடைந்தது. அவர் தனது பொழுதை பெரும்பாலும் தனிமையிலும், திருக்கச்சிநம்பியுடன் பழகுவதிலுமே கழித்தார். மனைவியிடமும் சரியாக பேசாமல் இருந்தார்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

# லீலா விநோதன் -2


- ஸ்ரீ ஸ்வாமிகள்

த்ராவிட தேசத்தில் சிதம்பர க்ஷேத்ரத்தை அறியாதவர்களே இருக்க முடியாது. சிவனுக்கும், திருமாலுக்கும் ஒரே இடத்தில் கோவில் இங்குதான் விசேஷமாக அமைந்துள்ளது. ஆழ்வார்கள் இந்த க்ஷேத்ரத்தை சித்திரகூடம் என்று அனுபவிக்கின்றனர். இங்கு நடராஜருக்கு தங்கக்கூரை வேயப்பட்டுள்ளது. பஞ்சபூத க்ஷேத்ரங்களில் இது ஆகாஶ க்ஷேத்ரமாக சொல்லப்படுகிறது. சிவபக்தர்கள் அனைவரும் இந்த க்ஷேத்ரத்தை பூலோக கைலாஶமாக கொண்டாடுகின்றனர். இன்றும் தீக்ஷிதர்களால் வைதீக முறைப்படி இங்கு பூஜைகள் நடந்து வருகின்றன. இந்த க்ஷேத்ரத்தில் மண்பாண்டங்கள் செய்யும் குலத்தில், ஒரு சிவபக்தர் வாழ்ந்து வந்தார். அவர் தன்னுடைய ஜீவனத்திற்கு வேண்டிய அளவில் மண்பாண்டங்கள் செய்து முடித்துவிட்டு, மற்ற நேரங்களில் எல்லாம் தன்னை சிவபக்தியில் ஈடுபடுத்திக் கொண்டார்.

ஒருநாள் கூட சிவதரிசனம் இல்லாமல் அவர் இருக்க மாட்டார். அதன் பொருட்டே அவர் வெளியூர் எங்கும் செல்வதில்லை. முடிந்தபொழுதெல்லாம், கோவிலுக்குச் சென்று, நடராஜ பெருமானைக் கண்ணாரக் கண்டு ஆனந்திப்பார். ஒருஸமயம், கோவிலில் ஒரு பௌராணிகர் புராண சொற்பொழிவு ஆற்றிக்கொண்டிருந்தார். அதில் பரமேஶ்வரனுக்கு எத்தனையோ திருநாமங்கள் இருந்தாலும், அதில் 'நீலகண்டன்' என்ற திருநாமமே மிகவும் விசேஷமானது என்று அழகாக விவரித்தார்.

தேவர்களும், அசுரர்களும் பாற்கடலை கடைந்தபொழுது, முதலில், ஆலகால விஷம் உண்டாயிற்று. அப்பொழுது பரமேஶ்வரன், யாரும் அழையாமலே வலியச்சென்று, அந்த விஷத்தை சற்றும் யோசிக்காமல் உட்கொண்டது, அவருடைய த்யாகபுத்தியை உணர்த்துகிறது என்றெல்லாம் பலவாறாக வர்ணித்தார். இதைக்கேட்ட அந்த சிவபக்தருக்கு 'நீலகண்டம்' என்ற திருநாமம் மேல் பிடிப்பு ஏற்பட்டுவிட்டது. எப்பொழுதும் ஓயாமல் நீலகண்டம், நீலகண்டம் என்றே சொல்லி வரலானார். அதனாலேயே எல்லோராலும் அவர் 'திருநீலகண்ட நாயனார்' என்று அழைக்கப்பட்டார்.

ஒரு ஸமயம், மாலையில் அவரும் அவர் மனைவியும் கோவிலிற்குச் சென்றனர். பகவானுக்கு 16 விதமான உபசாரங்கள் அழகாக நடந்து வந்த



காலமது. அதில் நாட்டியமும் ஒன்று. கோவிலில் ஒரு மாதுஸ்ரீ மிகவும் பாவத்துடன் நாட்டியம் ஆடிக்கொண்டிருந்தார். அந்த நாட்டியம் பக்தி பூர்வமாக இருந்ததால், 'நீலகண்டநாயனார்' அதில் அப்படியே லயித்துவிட்டார். இந்த நாட்டியமாடும் பெண்ணின் ரூபத்தில் அவர் மயங்கிவிட்டதாக அவருடைய மனைவி தவறாக புரிந்துகொண்டு, அவரை விடுத்து தனியாக வீடு சென்று விட்டார். நாட்டியம் முடிந்ததும், அவர் தன் மனைவியைத் தேடியும் காணாததால், வீடு திரும்ப யத்தனித்தார். திடீரென்று, நல்ல மழை பிடித்துக்கொண்டுவிட்டது. ஆகவே, அவர் மழைக்கு ஒரு வீட்டில் ஒதுங்க, அவ்வீடு எதிர்பாராதவிதமாக அந்த நாட்டியமாடிய பெண்ணின் வீடாகவே அமைந்துவிட்டது. தன் வீட்டிற்கு ஒரு சிவனடியார் வந்ததை நினைத்து, ஸந்தோஷப்பட்டு அவரை புது வஸ்த்ரங்களெல்லாம் உடுத்தச்செய்து, ஸேவித்து பலவிதத்திலும் அன்புடன் உபசாரம் செய்து அனுப்பினார்.

வீடு திரும்புகையில் ஏற்கனவே, இவர் மீது கோபத்திலும், ஸந்தேகத்திலும் இருந்த மனைவியானவள், இவருடைய ஆடை அலங்காரங்களைப் பார்த்து மிகவும் வெகுண்டு, இனி தன்னை தொட வேண்டாம் என்று 'நீலகண்டம்' என்ற நாமத்தின் மீது, ப்ரதிக்ஞை செய்து விட்டார். உத்தம தம்பதிகளாதலால் ப்ரதிக்ஞையை மீறாமல் பல காலம் வாழ்ந்து வயோதிகத்தை அடைந்தனர். இச்சமயத்தில், ஒரு சிவனடியார் அவர்கள் வீட்டில் அமுது செய்ய வந்தார். அவர் தன்னிடத்தில் ஒரு விசித்திரமான ஓடு (பிக்ஷை பாத்திரம்) உள்ளது என்றும், அதன் விசேஷம் யாது எனில், எத்தனை முறை கேட்டாலும், அது தனக்கு பிக்ஷை அளிக்கும் என்றும், ஆனால் மற்றவருக்கு இது பலிக்காது என்றும் கூறி அருளினார். அதே ஸமயம், தான் காசி யாத்திரை செல்வதால், தான் திரும்பி வரும் வரை இந்தத் திருவோட்டை, திருநீலகண்டநாயனாரிடம் கொடுத்து பத்திரமாக பாதுகாத்து வரும்படி கூறி சென்றுவிட்டார். ஆனால், ஓடோ அவர் சென்றவுடன், மாயமாக மறைந்துவிட்டது.

திரும்பி வந்த சிவனடியாரோ, திருநீலகண்டநாயனாரைப் பார்த்து பலவிதத்திலும் ஏசினார். அவரை திருடன் என்று பட்டம் கட்டினார். பொறுப்பில்லாதவன் என்று பழித்தார். நீலகண்டநாயனாரோ அடியாரின் காலைப் பிடித்துக்கொண்டு, இந்த பழியிலிருந்து தன்னை விடுவிக்குமாறு, பலவாறு ப்ரார்த்தித்தார். அடியாரோ, பக்கத்தில் உள்ள குளத்தில் அவரும், அவருடைய மனைவியும் கையைப் பிணைத்துக்கொண்டு மூழ்கி, தாங்கள் ஓட்டை எடுக்கவில்லை என்று ப்ரதிக்ஞை செய்தால், தான் அதை

நம்புவதாக கூறினார். நாயனாரோ, தாங்கள் ஒருவருக்கொருவர் தொடுவதில்லை என்பதை எடுத்துக் கூறினார். கடைசியாக சிவனடியாரும் இருவரும் ஒரு கழியைப் பிடித்துக்கொண்டு மூழ்க ஸம்மதித்தார். இருவரும் அப்படியே முழுகி எழுந்திருக்கையில் சிவனடியாரைக் காணவில்லை. அதே ஸமயத்தில், வானத்தில், ரிஷபாரூடனாக பார்வதி பரமேஸ்வரன் தரிசனம் தந்தனர். மேலும், அவர்கள் எந்த வயதில் ஒருவருக்கொருவர் தொடுவதில்லை என்று ப்ரதிக்ஞை செய்து கொண்டார்களோ, அதே இளமையான வயதை இப்பொழுது அடைந்திருந்தனர். மேலும் அவர்களுடைய கைகள் இரண்டும் தானாகவே இணைந்திருந்தது. அதற்கு சாட்சியாக சிதம்பரத்தில் 'இளமையாக்கினார்' கோவிலும், அந்த குளமும் அப்படியே உள்ளதை நாம் இன்றும் சென்று தரிசிக்கலாம்.

(தொடரும்)

---

வாழ்க்கையில் ஒருவனுக்கு கஷ்டம் வந்தவுடன் மனைவி வேண்டாம், குழந்தை வேண்டாம், வேலை வேண்டாம் என்றெல்லாம் நினைப்பதில்லை. ஆனால் தெய்வம் எதற்காக? குரு எதற்காக? ஸத்ஸங்கம் எதற்காக? என்று நினைக்க ஆரம்பித்து விடுகின்றான். குரு, தெய்வம், ஸத்ஸங்கம் இவைகள் எல்லாம் பலருக்கு கடைசி பக்ஷமாக இருப்பதே இதற்கு காரணம்.

**- பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்**

உத்தமகுருவை ஆஸ்ரயித்து இருப்பவர்கள், இப்படிப்பட்ட மஹான்களை மற்றவர்கள் புரிந்து கொள்ளவில்லையே என்றும் இவரை எப்படி மற்றவர்களால் ஸாதாரணமானவராக நினைக்க முடிகிறது என்றும் ஆஸ்சர்யப்படுவார்கள். மற்றவர்களோ இவரிடம் போய் இவர்கள் எல்லாம் இப்படி மயங்கி கிடக்கிறார்களே என்று ஆச்சர்யம் அடைவார்கள்.

**- பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்**

## நாம ஸங்கீர்த்தனம்

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞையின் பேரில், ஒரு நாம ஸங்கீர்த்தன இளைஞர் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழு, ஒவ்வொரு வீடாகச் சென்று "ஹரி நாம ஸங்கீர்த்தனம்" செய்ய சித்தமாக உள்ளது.

"ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே"

என்னும் கலியை நாசம் செய்ய வல்லமை படைத்த மந்த்ரத்தை இரண்டு மணி நேரம் தொடர்ந்து ஜபிக்கப்படும். இதை எல்லா ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் அரசாங்க விடுமுறை நாட்களில் காலை 9 மணி முதல் 11 வரை அல்லது மாலை 3 மணி முதல் 5 மணி வரை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நாம ஸங்கீர்த்தனத்திற்கு வரும் குழுவிற்காக எந்த விதமான கட்டணமும் இல்லை. பிரசாத விநியோகமோ, பணச்செலவோ கிடையாது. இதில் ஸ்த்ரீகள், புருஷர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம். அக்கம் பக்கத்து வீடுகளில் உள்ள தெரிந்தவர்களையும் கலந்து கொள்ளச் சொல்லலாம். இதனை ஏற்பாடு செய்தவர்களுக்கும் கலந்து கொண்டவர்களுக்கும் உள்ள எல்லா விதமான ப்ரச்சனைகளும் தீர்ந்து விடுவது ப்ரத்யக்ஷம்.

இந்த நாம ஸங்கீர்த்தனம், தங்கள் வீடுகளில் செய்ய விருப்பம் உள்ளவர்கள், தங்களின் பெயர், முழு விலாசம், நடத்த விருப்பமுள்ள தேதி, நேரம் (காலை அல்லது மாலை) என்கிற விபரங்களை முன் கூட்டியே கடிதம் எழுதி அதன் உறை மீது "நாம ஸங்கீர்த்தனம்" என்று எழுதி அனுப்பவும். கடிதம் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளவும். தொலைபேசி மூலமாகவோ நேரிலோ ஸ்ரீ ஸ்வாமிகளை தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்.

தபால் மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**

"ப்ரேமிக பவனம்"

24, நேதாஜி நகர், ஜாபர்கான் பேட்டை,

சென்னை - 600 083.

# பாலகர்களுக்கு ஒரு கதை-18

- ஸ்ரீ ஸ்வாமிகள்

அக்பருடைய ஸபையில் பீர்பால் என்ற புத்தி சாதுர்யமுள்ள ஒரு மந்திரி இருந்ததை அனைவரும் அறிவார்கள். அக்பருக்கு பீர்பால் மேல் அளவற்ற அன்பு உண்டு. தனக்கு எழும் விசித்திரமான சந்தேகங்களை எல்லாம் அவர் பீர்பாலிடம் கேட்பதுண்டு. அப்பொழுதெல்லாம் சற்றும் யோசிக்காமல் அனைவரும் வியக்கும்படியான பதிலை பீர்பால் கூறுவார். அந்த பீர்பால் ஒரு ராமபக்தர். எப்பொழுதும் ராமநாமஜபம் செய்து வருவார்.



அக்பர் எங்கு சென்றாலும் தன்னுடன் பீர்பாலையும் அழைத்துச் செல்வார். அப்படி ஏதோ ஒரு அலுவல் நிமித்தமாக சென்றவர்கள், ஒரு அடர்ந்த காட்டின் வழியாக வர நேர்ந்தது. இருவருக்கும் நல்ல பசி. அதே சமயம் மிகவும் களைத்திருந்தார்கள். ஆகவே ஒரு மரத்தடியில் தங்கிக்கொண்டு சிறிது நேரம் இளைப்பாறி செல்லலாம் என்று முடிவு எடுத்தனர். அக்பருக்கு மிகவும் பசித்ததால், அருகில் ஏதாவது ஒரு வீடு தென்படுகிறதா என தேட கிளம்பினார். தன்னுடன் வருமாறு பீர்பாலை அழைத்தார். பீர்பாலோ, தான் ராமநாம ஜபம் செய்து கொண்டிருப்பதால், உடன் வருவதற்கில்லை என்று கூறி விட்டார். அக்பரோ, ராமநாம ஜபம் செய்துகொண்டிருந்தால் எல்லாம் சாப்பாடு கிடைக்காது. நாம் முயற்சி செய்யவேண்டும். முயன்றால்தான் வாழ்வில் எதையும் அடைய முடியும் என்று கூறிக்கொண்டே, எங்காவது சாப்பாடு கிடைக்குமா என்று தேட கிளம்பினார்.

சிறிது தூரம் சென்றபின், ஒரு வீடு தென்பட்டது. அந்த வீட்டை அடைந்தவுடன் அந்த வீட்டில் உள்ளவர்கள், அரசரே வீடு தேடி வந்திருப்பதால் மிகவும் ஸந்தோஷப்பட்டு, தங்களுடைய சக்திக்கு தகுந்த அளவில் உபசரித்தனர். அக்பர், தான் உணவு உண்ட பிறகு, சிறிது உணவை பீர்பாலுக்கும் எடுத்துச் சென்றார். பீர்பாலுக்கு, தான் அவருக்காக எடுத்து வந்த உணவை கொடுத்துவிட்டு, முயற்சி செய்ததால்தான் தனக்கு உணவு கிடைத்தது என்றும், சும்மா உட்கார்ந்த இடத்திலே ராமநாமம் சொல்லிக்கொண்டிருக்கும் பீர்பாலுக்கு எதுவும் கிடைக்கவில்லை என்றும் பரிகசித்தார். பீர்பாலோ பொறுமையுடன் உணவை உட்கொண்டார். பிறகு அக்பரிடம், ''ராமநாமத்தின் வலிமையை இன்றுதான் நேரில் நான் அனுபவித்தேன். தாங்களோ மஹாராஜா. தாங்களே இன்று உணவுக்காக யாசிக்கும்படி ஆகிவிட்டது. ஆனால் ராமநாமத்தை சொல்லிவந்த எனக்காக இன்று மஹாராஜாவே பிக்ஷை எடுத்து என்னிடம் கொண்டு தரும்படி செய்து விட்டது ராமநாமம். என்னுடைய இருப்பிடத்திலேயே எனக்கு உணவு கிடைத்துவிட்டதல்லவா! இதுதான் ராமநாமத்தின் பெருமை'' என்று கூறினார். ■

# ஸ்ரீஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 45

*கௌதமர் போற்றும் கருணை மாமலையே*
*கடைக்கணித்தாள்வாய் அருணாசலா* - தொடர்ச்சி

அருணாசல மஹாத்மியத்தில் இந்த மலையைப் பற்றி வெகுவாக சொல்லப்பட்டிருக்கின்றது. அதில், இந்த மலையில், ஏழு சுனைகள் இருப்பதாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் இந்த மலையில்தான் ஒரு பெரிய ஆலவ்ருக்ஷத்தின் கீழே, தக்ஷிணாமூர்த்தி அமர்ந்துள்ளதாகவும் வர்ணிக்கப்பட்டுள்ளது. இவைகள் அனைத்தும் ஸ்தூல த்ருஷ்டிக்கு புலப்படாதது. ஆனால், இவைகள் அனைத்தும் இருப்பது ஸத்தியம். பகவானுடைய திருஷ்டிக்கு இவைகள் எல்லாம் அனுபவமாகி உள்ளது.

தக்ஷிணாமூர்த்தி ஏன் ஆலவ்ருக்ஷத்தின் அடியில் அமர்ந்துள்ளார் என்று யோசித்து பார்த்தேன். அதற்கும் ஒரு காரணம் உள்ளதாகவே எனக்கு தோன்றியது. தென்னை மரம் வளர்க்க ஒரு முத்தின தேங்காயை விதையாக போட்டால்தான் தென்னை மரம் வரும். அந்த அந்த மரத்தை பயிர் செய்ய அதனதன் விதைகளை நாம் தேடி எடுத்து பக்குவப்படுத்தி, சரியான இடம் பார்த்து, முறைப்படி விதைத்து பயிரிட்டால்தான் விளையும். ஆனால் ஆலமரத்தை மட்டும் ஶ்ரமப்பட்டு, விதை எடுத்து, ப்ரயத்தனப்பட்டு பயிரிட்டு விளைய வைக்க வேண்டிய அவசியம் கிடையாது. எவரும் எந்த பரிஶ்ரமப்படாமலே தானே அதன் விழுதுகள் பூமியில் விழுந்து அது மரமாகி விடுகின்றது. அதிலிருந்து பல விழுதுகள் தானாக பூமியிலிறங்கி அங்கங்கே மரங்கள் தோன்றிவிடுகின்றன.

அது போல், நாம் எவ்வளவு ப்ரயத்தனப்பட்டாலும், நமக்கு அடுத்த ஜன்மாவிற்கு வேண்டிய கர்மவாசனைகள், ஆல விழுதுகள் போல், தானாகவே மனதில் தோன்றி, அடுத்த ஜன்மத்திற்கு தானாகவே விதை ஆகி விடுகின்றது. ஒவ்வொருவரும், ஜன்மா வேண்டாம் என்றுதான் நினைக்கிறோம். ஜன்மா வராமல் இருக்க பலவிதமான ப்ரயத்தனப்படுகின்றோம். ஆனால், அதையும் மீறி நம்முடைய வினைப்பயனாக, தானாக, ஜன்மா வந்துவிடுகின்றது. இதைக்காட்டத்தான் என்னவோ தக்ஷிணாமூர்த்தி ஆலமரத்தின் அடியில் அமர்ந்துள்ளார்.

ஜனன மரணமாகிற ஸம்ஸாரத்திலிருந்து நிவ்ருத்தி வேண்டுமானால் தக்ஷிணாமூர்த்தி போன்ற உத்தம குருவை ஶரணடைய வேண்டும்.

தக்ஷிணாமூர்த்தி காலினால் அந்தகனை மிதித்து கொண்டிருக்கின்றார். மரணம் என்ற தத்துவமே அந்தகன். அதாவது அப்பேர்ப்பட்ட உத்தமகுருவை அடைந்துவிட்டால் மரணம் என்பதே இல்லை. மரணம் இல்லை என்றால், என்ன? மீண்டும் பிறப்பு இருந்தால்தானே மரணம்? பிறப்பே இல்லை. ஆகவே இனி மரணம் என்பதே இல்லை என்பதை காட்டுவதற்காகத்தான் அவர் தன்னுடைய காலின் அடியில் யமனை அடக்கி வைத்துள்ளார்.

அதுபோலவே திருவண்ணாமலையில் உள்ள அம்பாளுக்கு 'உண்ணாமுலைஅம்மன்' என்று பெயர். இந்த பெயரின் தத்துவம் என்னவாக இருக்கும்? இந்த க்ஷேத்திரத்தில் உள்ள அம்பாளை பூஜை செய்தால் மீண்டும் தாய்ப்பால் உண்ண வேண்டிய அவசியம் இருக்காது. அதாவது மீண்டும் பிறந்தால் தானே முலைப்பால் குடிக்க நேரிடும். அதற்கு அவசியமே இல்லாமல் போய்விடும் என்பதை உணர்த்துவதற்காகத்தான் இப்படி நாமகரணம் வைத்துக்கொண்டிருக்கிறாள் போலும். வடமொழியில் ஒரு பக்தர் இதே மாதிரி விஷயமாக ஒரு ஶ்லோகம் எழுதி உள்ளார். ஸ்வாரஸ்யமாக உள்ளதால் அதையும் இங்கு சொல்கிறேன். பகவான் கோபாலன், அநேக பசு கன்று குட்டிகள் சூழ உள்ளதை பார்த்து இவனை ஸேவித்தால், நாம் அருந்த நிறைய பால் தருவான் என்ற ஆசையினால் சென்று, அவனை தஞ்சமடைந்தேன். ஆனால் பலன் விபரீதமாகிவிட்டது என்கின்றார். அப்படி என்ன ஆயிற்று என்றால், அவன் பால் தராமல் போனாலும் பரவாயில்லை. இதுநாள் வரை, பல மாதாக்களிடமிருந்து முலைப்பால் அருந்தி வந்தேன். இனி, அதுவும் கிடைக்காதபடி செய்து விட்டான் என்று அழகாக, இனி பிறவி இல்லாமல் பகவான் கோபாலன் அருளியதை இப்படி தெரிவிக்கின்றார்.

இதுபோல் திருவண்ணாமலை மலையிலும் திருவண்ணாமலை க்ஷேத்ரத்திலும் உள்ள பல அநேக திவ்யமான விஷயங்கள் பகவானுடைய திவ்ய திருஷ்டிக்கு தரிசனமாகியுள்ளது. தூரதேசம் அறிதல், பிறர் மனம் அறிதல் போன்றவைகள் திவ்ய திருஷ்டி ஆகமாட்டா. ப்ரதி க்ஷணமும் ஆத்மஸ்வரூபத்திலேயே மனதை வைத்திருப்பதுதான் திவ்ய திருஷ்டி என்பது வாஸ்தவமே. ஆனால், இங்கு பகவான் போன்ற மஹான்கள் இவைகளை தர்சனம் செய்வதற்காக தன்னுடைய எந்த திவ்ய சக்திகளையும் பயன்படுத்துவதில்லை. அவர்களுக்கு தானாகவே இவைகள் தரிசனம் ஆகின்றது. எவையும் அவர்களுக்கு அன்னியமாக இல்லை என்பதுதான் உண்மை.

(தொடரும்)

- தொகுப்பு : முரளீதாஸன்

# செய்திகள்

### மார்ச் 26-ந் தேதி

சென்னை நங்கநல்லூரில் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி கல்சுரல் அகாடமி சென்டர் சார்பில், ஸ்ரீ ஸ்வாமிகள் ஸ்ரீ ராமநவமி உத்ஸவத்தை துவக்கிவைத்து உபன்யாஸம் செய்தார்கள்.

### மார்ச் 29-ந் தேதி

சென்னை கபாலீஸ்வரர் அறுபத்திமூவர் உத்ஸவத்தை முன்னிட்டு நமது மிஷன் சார்பில் 500 பேருக்கு அன்னதானம் செய்யப்பட்டது.

### ஏப்ரல் 9-ந் தேதி

பாப்பா ராம்தாஸ் ஜயந்தி முன்னிட்டு வளசரவாக்கத்தில் நடைபெற்ற அகண்ட நாமஜபத்திற்கு நம் ஸ்வாமிகள் கலந்து கொண்டு உபன்யாஸம் செய்தார்கள்.

### ஏப்ரல் 12-ந் தேதி - ஏகாதஶீ

சென்னை ப்ரேமிகபவனத்தில் ஏகாதஶியை முன்னிட்டு விசேஷ பஜனை நடைபெற்றது.

### ஏப்ரல் 14-ந் தேதி

ப்ரமாதி - தமிழ் புத்தாண்டு முன்னிட்டு சென்னை ப்ரேமிக பவனத்தில், பஞ்சாங்க படனம் நடைபெற்றது. ஸ்ரீ ஸ்ரீநிவாஸபெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடைபெற்றது. மதியம் ஸுந்தரகாண்ட ஏகதின மூல பாராயணம் நடைபெற்றது. மாலையில் ஸுந்தரகாண்ட ப்ரவசனமும் இரவில் பஜனையும் நடைபெற்றது.

### ஏப்ரல் 18-ந் தேதி

அக்ஷயத்ருதியை முன்னிட்டு சென்னை ப்ரேமிகபவனத்தில் இரவு 7 மணியளவில் விசேஷ திவ்யநாமம் நடைபெற்றது.

### ஏப்ரல் 19-ந் தேதி

நம் ஸ்வாமிகள் பம்மல் ஸ்ரீஸத்ஸங்கம் சார்பில் ஸ்ரீ சங்கர மஹிமை பற்றியும் ஸ்ரீ மஹா பெரியவாள் பற்றியும் உபன்யாசம் நிகழ்த்தினார்கள்.

### ஏப்ரல் 20-ந் தேதி - ஸ்ரீ ஶங்கர ஜயந்தி

சென்னை ப்ரேமிகபவனத்தில், காலையில் ஸ்ரீஶங்கர ஜயந்தி கொண்டாடப்பட்டது. ஸ்ரீ ஸ்வாமிகள் ஸ்ரீ மஹாபெரியவாள் பாதுகைக்கு அபிஷேகம் செய்தார்கள். ஸ்ரீ ஶங்கரரின் ஸ்தோத்ரங்கள் பாடப்பட்டன.

**மங்களானி பவந்து**

# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registar of Newspapers for India
R. No. 62828/95

வேணு : 4 | மே 1999 | கானம் : 10





Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar